DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.1 COURT , NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register CC 588/2021 DCB காவல்நிலையம்

Session
Deposition of witness for : PW-5 (LW-6)

| | | | |
|---|---|---|---|
| Name : சிங்காரவேலன் | | Village /Taluk : | |
| Fathers Name or Husband Name: | | Caste /Religion : | |
| | | Age /Calling : | |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 08.11.2023

எதிரிகள் மூவரும் ஆஜர் இல்லை. எதிரிகள் மூவருக்கும் சட்டப்பிரிவு 317 CrPC கீழான ஆஜரின்மை மனுவானது அனுமதிக்கப்பட்டதுஎதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது நாகப்பட்டினம் நீலா கீழா வீதியில் குடியிருந்து வள்ளலார் கோவிலில் பூசாரியாக வேலை பார்த்து வருகிறேன். பட்டியல் சாட்சிகளான ஆனந்தராஜ், கலைமணி மற்றும் அபிநயா எங்களது கோவிலுக்கு அவ்வப்போது வழிபாட்டிற்கு வருகிற காரணத்தினால் தெரியும். இவ்வழக்கின் எதிரிகளான சேதுராமன், பாலமுருகன், மற்றும் உஷா ஆகியோர்களளும் அவ்வப்போது வழிபாட்டிற்கு எங்களது கோவிலுக்கு வருகிற காரணத்தினால் தெரியும்.

கடந்த 2016ம் ஆண்டில் அ.சா.1- ஆனந்தராஜ் என்பவர் வெளிநாட்டில் வேலைபார்த்து விட்டு திரும்பி வந்திருந்தார். அப்போது மேற்படி ஆனந்தராஜ் சம்பாதித்து மகளின் திருமணத்திற்காக ரூ.12,50,000/- தொகையினை சேமித்து வைத்திருந்தார். மேற்படி தொகையினை எதிரிகள் நடத்தி வ்நதிருந்த Prompt Multi State Co - Operate House Building Society என்ற நிறுவனத்தில் முதலீடு செய்தால் லாபம் கிடைக்கும் என்ற நோக்கில், மேற்படி ஆனந்தராஜ் மற்றும் அவரது மனைவியான கலைமணி ஆகியோர்களின் பெயரில் தலா ரூ.6,25,000/- முதலீடு செய்திருந்தார். மேற்படி முதலீடு செய்யப்பட்டதற்கான பத்திரங்கள் மற்றும் கணக்கு புத்தகத்தினை ஆனந்தராஜன் என்பவர் என்னிடம் காண்பித்திருந்தார். மேற்படி முதலீடு செய்யப்பட்டிருந்த தொகையினை கடந்த 2020 ம் ஆண்டு மேற்படி ஆனந்தராஜ் என்பவர் எதிரிகள் நடத்தி வந்த நிறுவனத்திற்கு சென்று திரும்ப கேட்ட போது மேற்படி தொகைகள் அவருக்கு கிடைத்திருக்கவில்லை.

மேற்படி ஆனந்தராஜ் என்பவர் செலுத்திய தொகைகளை எதிரிகளிடம் பலமுறை கேட்ட போதும் திரும்ப அளித்திருக்காத காரணத்தினால் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்திருந்தார். மேற்படி புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு காவல் அலுவலகத்திற்கு விசாரணைக்கு எங்களை அழைத்திருந்தார்கள். மேற்படி அழைப்பின் பேரில் கடந்த 25.12.2020 தேதியன்று விசாரணைக்கு சென்றிருந்த சமயம் அங்கு எதிரிகளான சேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை போலிசார் கைது செய்து காவலில் வைத்திருந்தார்கள். மேற்படி 25.12.2020 தேதியன்று காலை 12.15 மணி முதல் 13.15 மணி வரையில் எதிரியான ஜெயசேதுராமன் என்பவர் தானாக முன்வந்து அளித்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தினையும், அதனை தொடர்ந்து பகல் 01.30 மணி முதல் 02.00 மணி வரையில் எதிரியான பாலமுருகன் என்பவர் தானாக அளித்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தினையும் போலிசார் எங்களது முன்னிலையில் பதிவு செய்து கொண்டு மேற்படி ஒப்புதல் வாக்குமுலங்களில் என்னிடமும் சீனிவாசன் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்று கொண்டார்கள். என்னிடம காட்டப்படும் எதிரிகளான ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் அளித்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் அளித்ததாக சொல்லப்படும் கண்டுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.ஆ.19 என குறியீடு செய்யப்படுகிறது**.)

அதனை தொடர்ந்து மதியம் சுமார் 02.30 மணியளவில் எதிரிகள் ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோரிடம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மாதிரி கையொப்பங்களை பெற்றுக்கொண்டு என்னிடமும் மேற்படி சீனிவாசன் என்பவரிடமும் மேற்படி மாதிரி கையொப்பங்கள் அடங்கிய காகிதத்தில் சாட்சி கையொப்பம் பெற்று கொண்டார்கள். என்னிடம்ட காட்டப்படும் எதிரிகளான ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களின் மாதிரி கையொப்பங்கள் அடங்கிய காகிதத்தில் கண்டுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி எதிரிகளான ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களின் மாதிரி கையொப்பங்கள் அடங்கிய காகிதத்தில் கண்டுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.20 மற்றும் அ.சா.ஆ.21 என குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி விவரங்களை மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் விசாரித்தபோது தெரிவித்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.1 COURT , NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register **CC 588/2021** **DCB காவல்நிலையம்**

Session
Deposition of witness for : PW-4 (LW-5)

| | |
|---|---|
| Name : **சீனிவாசன்** | Village /Taluk : |
| Fathers Name | Caste /Religion : |
| or Husband Name: | Age /Calling : |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 08.11.2023

எதிரிகள் மூவரும் ஆஜர் இல்லை. எதிரிகள் மூவருக்கும் சட்டப்பிரிவு 317 CrPC கீழான ஆஜரின்மை மனுவானது அனுமதிக்கப்பட்டதுஎதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது நாகப்பட்டினம் மருந்து கொத்தள காளியம்மன் சன்னதியில் குடியிருந்து வள்ளலார் கோவிலில் பூசாரியாக வேலை பார்த்து வருகிறேன். பட்டியல் சாட்சிகளான ஆனந்தராஜ், கலைமணி மற்றும் அபிநயா எங்களது கோவிலுக்கு அவ்வப்போது வழிபாட்டிற்கு வருகிற காரணத்தினால் தெரியும். இவ்வழக்கின் எதிரிகளான சேதுராமன், பாலமுருகன், மற்றும் உஷா ஆகியோர்கள் ராஜாராணி காம்ப்ளக்ஸில் தனியார் நிறுவனம் நடத்தி வந்த காரணத்தினால் அவர்களையும் தெரியும்.

கடந்த 2016 ம் ஆண்டில் அ.சா.1- ஆனந்தராஜ் என்பவர் வெளிநாட்டில் வேலைபார்த்து விட்டு திரும்பி வந்திருந்தார். அப்போது மேற்படி ஆனந்தராஜ் சம்பாதித்து மகளின் திருமணத்திற்காக ரூ.12,50,000/- தொகையினை சேமித்து வைத்திருந்தார். மேற்படி தொகையினை எதிரிகள் நடத்தி வ்நதிருந்த Prompt Multi State Co - Operate House Building Society என்ற நிறுவனத்தில் முதலீடு செய்தால் லாபம் கிடைக்கும் என்ற நோக்கில், மேற்படி ஆனந்தராஜ் மற்றும் அவரது மனைவியான கலைமணி ஆகியோர்களின் பெயரில் தலா ரூ.6,25,000/- முதலீடு செய்திருந்தார். மேற்படி முதலீடு செய்யப்பட்டிருந்த தொகையினை கடந்த 2020 ம் ஆண்டு மேற்படி ஆனந்தராஜ் என்பவர் எதிரிகள் நடத்தி வந்த நிறுவனத்திற்கு சென்று திரும்ப கேட்ட போது மேற்படி தொகைகள் அவருக்கு கிடைத்திருக்கவில்லை. அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் கோயம்புத்தூரில் உள்ளதாக கேள்விபட்டு, தலைமை அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோது நாக்பபட்டினத்தில் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட கிளைகள் ஏதும் கிடையாது என தலைமை

அலுவலகத்தில் தெரிவித்ததனை தொடர்ந்து எதிரிகள் மேற்படி நிறுவனத்தின் பெயரில் போலியாக மோசடி செய்த விபரம் மேற்படி ஆனந்தராஜ் என்பவருக்கு தெரிய வந்தது.

மேற்படி ஆனந்தராஜ் என்பவர் செலுத்திய தொகைகளை எதிரிகளிடம் பலமுறை கேட்ட போதும் திரும்ப அளித்திருக்காத காரணத்தினால் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்திருந்தார். மேற்படி புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு காவல் அலுவலகத்திற்கு விசாரணைக்கு எங்களை அழைத்திருந்தார்கள். மேற்படி அழைப்பின் பேரில் கடந்த 25.12.2020 தேதியன்று விசாரணைக்கு சென்றிருந்த சமயம் அங்கு எதிரிகளான சேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை போலிசார் கைது செய்து காவலில் வைத்திருந்தார்கள். மேற்படி 25.12.2020 தேதியன்று காலை 12.15 மணி முதல் 13.15 மணி வரையில் எதிரியான ஜெயசேதுராமன் என்பவர் தானாக முன்வந்து அளித்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தினையும், அதனை தொடர்ந்து பகல் 01.30 மணி முதல் 02.00 மணி வரையில் எதிரியான பாலமுருகன் என்பவர் தானாக அளித்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தினையும் போலிசார் எங்களது முன்னிலையில் பதிவு செய்து கொண்டு மேற்படி ஒப்புதல் வாக்குமுலங்களில் என்னிடமும் சிங்காரவேலன் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்று கொண்டார்கள். என்னிடம காட்டப்படும் எதிரிகளான ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் அளித்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் அளித்ததாக சொல்லப்படும் கண்டுள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.14 மற்றும் அ.சா.ஆ.15 என குறியீடு செய்யப்படுகிறது.)**

அதனை தொடர்ந்து மதியம் சுமார் 02.30 மணியளவில் எதிரிகள் ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோரிடம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மாதிரி கையொப்பங்களை பெற்றுக்கொண்டு என்னிடமும் மேற்படி சிங்காரவேலன் என்பவரிடமும் மேற்படி மாதிரி கையொப்பங்கள் அடங்கிய காகிதத்தில் சாட்சி கையொப்பம் பெற்று கொண்டார்கள். என்னிடம்ட காட்டப்படும் எதிரிகளான ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களின் மாதிரி கையொப்பங்கள் அடங்கிய காகிதத்தில் கண்டுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி எதிரிகளான ஜெயசேதுராமன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களின் மாதிரி கையொப்பங்கள் அடங்கிய காகிதத்தில் கண்டுள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.16 மற்றும் அ.சா.ஆ.17 என குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி விவரங்களை மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் விசாரித்தபோது தெரிவித்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.